[23rd March 1959

SRI A. GOVINDASAMY : It is not an argument, Sir. It is a straight question.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஈரம் இல்லையென்றால் மழை இருக்க வேண்டும் அல்லது வேறு எந்த வகையிலாவது ஈரம் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் தேக்கு பயிரிட முடியும். இதையே தான் காட்டிலாகா விவாதத்தின்போது குறிப்பிட்டேன். அதற்குமேல் விவரம் ஒன்றும் என்னிடம் இல்லை.

SRI P. G. MANICKAM : மேஜையின் மீது வைக்கப்பட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டபடி ரப்பர் தோட்டங்களில் எத்தனை எக்கர்கள் எவ்வளவு எக்கர் நிலங்கள் இந்தியர்களுக்குச் சொந்தமானவை, எவ்வளவு எக்கர் நிலங்கள் அந்நியருக்குச் சொந்தமானவைகள் என்ற குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படிப்பட்ட விவரம் ஒன்றும் என்னிடம் இப்பொழுது இல்லை.

SRI R. SRINIVASA IYER : Sir, may we know how far the plantation of teak in the Tanjore district has been successful?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : We are trying. There have been some old trees in some of the river banks, as for instance, in the compound of the travellers' bungalow in Nannilam. Now we are trying experimental plantation of teak on river sides, and so far it is successful.

Employment of poor agriculturists

* 943 *Q.*—SRI V. ARUNACHALA THEVAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have any schemes to provide employment to the poor agriculturists in all the taluks of Pudukkottai division due to failure of monsoon there?

THE HON. SRI M. A. MANICKAVELU : The Collector of Tiruchirappalli has submitted certain proposals for providing employment to agricultural labourers in Pudukkottai division and these are under consideration.

SRI A. VEDARATHNAM : அதே போன்று மற்ற பகுதிகளிலும் எதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா ? பஞ்ச நிவாரண நடவடிக்கைகளை எதாவது அரசாங்கம் உடனடியாக எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : எந்தப் பகுதிகளிலெல்லாம் பருவ நிலை சரியாக இல்லாமல் இருக்கிறதோ அங்கேயெல்லாம் விவசாயிகளுக்கு வேலை கொடுப்பதற்கு பல பல திட்டங்களை வகுக்க வேண்டும் என்று ஆலோசனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

SRI K. R. VISWANATHAN : பருவ நிலை பாதிக்கப்பட்ட உடையார்பாளையம் தாலுக்காவில் ஏழை விவசாயிகளுக்கு வேலை கொடுக்க எதாவது திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி எதாவது திட்டங்களை கலெக்டர் தயாரித்து அரசாங்கத்திற்கு சிபார்சு செய்திருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : The question relates to Pudukottai. Is Udayarpalayam in the same district?

THE HON. SRI M. A. MANICKAVELU : May be the same district but not the same division.

எங்கே அம்மாதிரி பருவநிலை சரியாக இல்லாமல் என்ன நிவாரண வேலை செய்ய வேண்டுமோ அதைப் பரிசிலித்து அதற்குத் தகுந்த ஏற்பாடும் செய்யப்பட்டு வருகிறது.

Land holdings

* 944 *Q.*—Sri S. M. ANNAMALAI : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

நம் மாநிலத்தில் 10 எக்கருக்கு உட்பட்டு நிலம் வைத்திருப்பவர் களும், வாரத்திற்குப் பயிரிடும் விவசாயிகளும் எத்தனை பேர் இருக்கிறார் கள் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : According to the census of landholdings and cultivation taken in 1955, the number of persons who own less than 10 ordinary dry acres of land in the Madras State excluding the transferred territory is 35,46,325. Out of these, 1,64,692 persons have leased out their lands.

Figures relating to the number of lessees who cultivate less than 10 acres of land have to be gathered from subordinate offices. But the labour and time involved will not be commensurate with the advantage to be gained.

Sri S. M. ANNAMALAI : வாரம்தார்கள் பயிர் விவரங்கள் ஒன்றுக்கு மூன்று எக்ரிமெண்ட் செய்திருந்தால் அதை வாரம்தார்கள் குறிப்பிட முடியும். அடங்கலில் சொல்லியபடி நிலங்கள் அவர்களிடத்தில் இல்லாமல் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கலாம். ஆகவே அடங்கலில் இருக்கக் கூடிய அளவில் நிலங்கள் இருப்பதாக அமுலில் கொண்டுவருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? அப்படி ஏதா வது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : தனிக் கேள்வி போட்டால் அதைப் பற்றி பரிசிலனை செய்யப்படும்.

Sri T. R. RAMAMIRTHA THONDAMAN : இந்த நியாய வாரச் சட்டப்படி குத்தகைச் சீட்டு எழுதி தாலுகாவுக்கு அனுப்ப வேண்டும் என்பது ஒன்று. கர்ணம் அடங்கலில் சாகுபடிக்காரர்களின் (மெம்பர் களை) எழுதி அதை சர்க்காருக்கு அனுப்புவது மற்றொன்று. இந்த இரண்டு விதத்தையும் விட்டுவிட்டு வேறு எவ்வித ரெகார்டும் இல்லாமல் இருக்கக்கூடிய அளவில் விவசாயிகள் நில சொந்தக்காரர்கள் சீட்டு எழுதிக்கொள்ளாமல் எழுதாமல் இருந்தால் நிலச்சுவாந்தார்கள் மீது சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா அல்லது எடுக்கப் போகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : அதைப் பற்றி எங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதைப் பற்றி கவனிக்க முடியும். தகவல் ஒன்றும் இல்லாமல் எப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும் ?

Sri M. P. SUBRAMANIAM : வாரம்தார்களை வெளியேற்றப்படுகிற நேரத்தில் தாங்கள் வாரம்தார்கள் என்பதை நிரூபிப்பதற்கு கிராமக் கணக்குப்பிள்ளை போன்றவர்கள் வைத்திருக்கும் அடங்கலை ஆதார மாக கோர்ட்டுகள் எடுத்துக்கொள்வதில்லை என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா ? ஒப்பந்தச் சீட்டு அல்லது கிராம அடங்கல் இரண்டும் இல்லாத நேரங்களில் வேறு எதையாவது ஆதாரமாகக் காட்டு வதற்கு ஏதாவது வழிவகை செய்ய இந்த அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இதுவரைக்கும் அம்மாதிரி அரசாங்கத்துக்கு ஒன்றும் தகவல் இல்லை சட்டப் பிரகாரம் லீஸ் எழுதிப் பதிய வேண்டும் என்று இருக்கிறது. அது சட்டப் பிரகாரம் கோர்ட்டுக்குப் போகவில்லை என்று நினைக்கிறேன். அதனால் அடங்கலை ஏற்றுக்கொள்ளவில்லை என்று நினைக்கிறேன்.